ஜூன், 1928

Y31ന2,N26
N28·3·1
199373

Reg. No. M. 2169. III.—1

# ரூரல் இந்தியா

(பாரெஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டிகலெக்டர்
ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் III.] ஜூலை, 1928

28 SEP 1928 MADRAS

பொருளடக்கம்.

| தொ. | | பக்கம். |
|---|---|---|
| 1 | கூட்டுறவென்றால் என்ன ? | |
| 2 | கிராமாந்தரங்களில் கூட்டுறவு முயற்சிகளும், கிராமாந்தரச்சீரமைப்பு முயற்சிகளும் | 4 |
| 3 | கர்நூல் ஜில்லாவில் கற்பலகைத்தொழில் | 7 |
| 4 | நமது பத்திரிகை. | 8 |
| 5 | வியவஸாயக்குறிப்புகள் | |
| | (a) கரும்பு | 10 |
| | (b) தென்னை, வாழை, கால்நடைத் தீவனப்பயிர் | 12 |
| | (c) மாதுளை | 13 |
| | (d) எருக்கு | 16 |
| | (e) கருணைக்கிழங்கு | 17 |
| 6 | வர்த்தமானக் குறிப்பு | 21 |

Annual Subscription (inclusive of Postage)
Inland Rs. 3 : Foreign Rs. 4—8—0.

Single copy, Inland As. 6 : Fereign As. 8.

Rural India reaches the Villages and Towns of India.
It is the best medium for advertisement.

Published by MR. A. RAJAGOPALA REDDI,
President, Forest Panchayatdars Union Ltd. Madras.

# Lantern Slides

ARE A GREAT HELP IN WORK WITH

## Adult Illiterates




Teach the three "Rs" and lessons in

GEOGRAPHY — HISTORY

GEOLOGY — HYGIENE

AGRICULTURE — SCOUTING

ZOOLOGY — HANDICRAFT

TEMPERANCE

**We Sell** LANTERNS ACCESSORIES SLIDES

We can help with your programme of Visual Lessons.

Write to :—

The Secretary Lecture Department,

5, Russell Street, Calcutta.

# ரூரல் இந்தியா

(பாரெஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெ[illegible]

ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்

வால்யூம் III.] ஜூலை, 1928 [நெ. 1


## What is Co-operation ?
## கூட்டுறவென்றால் என்ன ?

[இது சேலம் ஜில்லாவின் கூட்டுறவினர்களுடைய ஏழாவது வருஷாந்தர மஹாநாட்டில் ம-ா-ா-ஸ்ரீ திவான் பகதூர் ஆர். ராமச்சந்திரராவ் ஸி. எஸ். ஐ. அவர்களின் அக்ராஸனமொழிவு.]

கூட்டுறவென்பதென்ன? அந்த உணர்ச்சியின் நோக்கத்தை அடைய வேண்டியதற்கு முயற்சிகள் எத்தன்மையாக கைக்கொள்ளப்பட வேண்டும்? தற்சமயத்தில் ஒரு கமிட்டியானது மாஹாணக்கூட்டுறவு முயற்சிகளைப் பரிசோதித்து வருகிறது. பொது ஜனங்களும், பாங்கர்களும் கூட்டுறவு முயற்சிகளின் சம்பந்தமாய்ச் சரியான ஞானத்தையும் அநுபவத்தையும் அடைந்தவர்களாகவிருக்கவில்லை. ஒவ்வொருவருடைய யோசனைகளும் அவர் அவருடைய முயற்சிகளால் அடையப்பட்டிருக்கிற ஞானத்தையும் அநுபவத்தையுமே ஒத்து ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் கூட்டுறவு விஷயங்களில் சிலவற்றை மாத்திரமே கவனிக்கிறார்களாகையால் அவர்கள் அவ்விஷயங்களால் ஏற்பட்ட ஞானத்தைக்கொண்டே மாத்திரம் சேர்திருத்த விஷயத்தில் யோஜனைகளைக் கைக்கொள்கிறார்கள். கூட்டுறவு முயற்சிகள் எப்படி நடந்தால் சரியானபயன்களைக் கொடுக்குமென்பது எவராலும் தக்கபடி அறியப்பட்டிருக்கவில்லை. ஆகவே, கூட்டுறவியக்கம் இனி சரிவர நடக்கவேண்டுமானால் அது விஷயமாய் இதுவரையில் நடந்தேறிய முயற்ச்சிகளை நாம் நன்றாய்ப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். அப்படி அவைகளை [illegible] பொழுது பரிசோதித்துப்பார்த்து சேர்திருத்த மு[illegible]க்கைக்

கொள்ளாவிட்டால் நம்முடைய கூட்டுறவு இயக்கம கெட்டுப்போயழிந்துபோய் விடுமென்பதில் சந்தேகமே யில்லை.

கூட்டுறவு முயற்ச்சிகள் எல்லாவிததொழில்களிலும் அநுஷ்டிக்கப்படக்கூடுமென்பது எல்லோராலும் இன்னும் அறியப்படவில்லை. இங்கே இப்பொழுது வந்திருக்கும் நண்பரொருவர் வியவஸாயத் தொழிலில் கூட்டுறவு எந்தெந்தவகைகளில் அநுஷ்டிக்கப்படக் கூடுமென்று வினவினர். பயிர்த்தொழிலில் எல்லாவித வேலைகளிலும் அது அநுஷ்டிக்கப்படலாம். உழுவதில் எல்லோரும் ஒன்று சேர்ந்து டிராக்டரை வாங்கி உபயோகிக்கலாம், நீர்பாசனத்திற்கு எல்லோரும் சேர்ந்து பம்பிங்குமெஷீன்களை வாங்கி உபயோகிக்கலாம், விரைகளை வாங்குவதற்கு எல்லோரும் கூட்டுறவு சங்கமாகச்சேர்ந்து வாங்கினுல் நல்ல விரைகளை வாங்கக்கூடும், விலையும் குறைவாகவிருக்கும். அறுவடையான தான்யங்களிற்குக் கூட்டுறவுக் களஞ்சிய ஏற்பாடு அமைந்தால் தான்யங்கள் சரியானகாலங்களில் தகுந்த விலைகளுக்கு விற்கப்படக்கூடும். இவ்வேற்பாடு உண்டாகுமாகில் பயிரிடுவோர் தான்யங்களின் பேரில் கூட்டுறவு சங்கங்களிலிருந்து சுவல்பவட்டிக்குக் கடன் வாங்கிக்கொள்ளக்கூடும், அவர்கள் தான்யங்களை அறுவடையான உடனேயே பணம் வேண்டிய நிமித்தம் விற்கவேண்டியதாக நேரிடாது.

கவர்மெண்டை நடத்தும் துறைகளில்கூட கூட்டுறவு அநுஷ்டிக்கப்படக்கூடும். சாஸ்திர ஆராயச்சி இலாகாக்களிலும், வைத்திய, மராமத்து இலாகாக்களிலும் தவிர மற்ற எல்லா இலாகாக்களிலும் கூட்டுறவு அனுஷ்டிக்கப்படக்கூடும். கிராம ஆட்சி வழியில் கூட்டுறவு அநுஷ்டிக்கப்படுகிறதை எல்லோரும் கவனித்திருக்கக் கூடும். முன்காலத்தில் கூட்டுறவு முயர்ச்சிகள் கிராம ஆக்ஷி வழிகளில் அதிகமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்தன வென்பதும் சரித்திர பூர்வமாக நமக்குத் தெரியவருகிறது. பிரிடிஷ்கவர்மெண்டார் அத்தன்மையாகவே கிராம ஆக்ஷிவழிகளில் கூட்டுறவு வழிகளை ஏற்படுத்தினுல் தான் கிராமாந்தரங்களில் க்ஷேமமேற்படும்.

கிராமாந்தர முன்னேற்ற முயற்சிகளில் கூட்டுறவு அநுஷ்டிக்கப்பட வேண்டியது அவசியமாக விருக்கிறது. கிராமாந்தர முன்னேற்ற முயற்சிகளென்றுலே கூட்டுறவு முயற்சிகள் தான். ஆன போதிலும் இவ்வித முயற்சிகளில் சிலவிற்கு வேண்டிய திரவியத்தை [illegible]ரிடத்திலிருந்து, அல்லது கவர்மெண்டாரிடத்திலிருந்து அ[illegible]துவது சரியான வழியல்ல. கூட்டுறவையநுஷ்டிக்கிற

197373



கிராமத்தார் தங்களுடைய சக்தியைக் கொண்டே இம்முயற்சிகளை நடத்தவேண்டும். அயலார் பணத்தை அவர்கள் எதிர்பார்த்தால் அவர்களின் முயற்சிகள் கூட்டுறவு முயற்சிகளாகாது. அவை பயன் படாது.

கோ ஆபரேஷனென்கிற ஆங்கில மொழியாவது அல்லது கூட்டுறவென்கிற தமிழ் மொழியாவது க்ஷேம செல்வவிருத்தி தக்கவாறு ஏற்படவேண்டியதற்கு கைக்கொண்டு அனுஸரிக்கப்பட வேண்டிய ஐக்கிய உணற்சியென்று சரியாகக்குறிக்கவில்லை. ஆன போதிலும் அவ்வர்த்தத்தைச் சரியாய்க் குறிக்கக்கூடிய வேறு மொழியில்லாமையால் அப்பதங்கள் உபயோகிக்கப்படுகின்றன. ஆதியில் ஜனங்கள் வேட்டையாடி உணவுகளை அடைந்து ஜீவித்தார்கள். அடுத்தபடியாக ஆடுமாடுகளை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்தார்கள். அதன் பின்பு வியவஸாயத்தைக் கைக்கொண்டார்கள். கடைசியாக தொழில் ஜீவனத்தை யநுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு வழியை யநுஷ்டித்ததிலும் சில சீர்கேடுகளேர்பட்டு நிரந்தரமாக அவைகள் ஜனங்களிடத்திலிருந்து கொண்டிருக்கின்றன. தொழில்கள் ஏற்பட்ட பின்பு ஜன பஹூளத்திற்கு வேண்டிய அளவுகளில் பொருள்கள் உற்பத்தியாக்கப் படவேண்டியதாக விருந்தது. அது காரணத்தைப்பற்றி மூலதன ஏற்பாடுகள் வியாபாரச்சங்கங்கள், வியாபாரச்சுதந்திரங்கள் இவைகளெல்லாம் ஏற்பட்டன இவைகள் ஏற்பட்டபின்பு லாபங்களும் சௌகரியங்களும் மூலதனங்களை யளித்தவர்களுக்கும் சுதந்தரவியாபாரிகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்குமே ஏற்பட்டு விட்டன. உற்பத்தி செய்கிறவர்கள் கவனிக்கப்படுகிறதேயில்லை. கவர்மெண்டாரும் அவர்களை கவனிக்கிறதேயில்லை.

ஜனங்களின் மேல் கொண்ட நாகரிகவழிக்குக்கூட்டுறவு முக்கியமானது. கோ ஆபரேடிவ் ஸ்டோர்களும் பாங்குகளும் மாத்திரமே உண்டாவதால் போதாது. கூட்டுறவானது வியாபாரிகளிடத்தில் உள்ள சுதந்தர ஏற்பாடுகளையும், தரகரி ஏற்பாடுகளையும், ஒழித்து வியவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் சரியான வருமானத்தை உண்டுபண்ணி ஜனங்கள் அவர் அவர் தங்களுடைய பலத்தையும் சக்தியையும் கொண்டே முயர்ச்சிசெய்து ஜீவித்து க்ஷேமத்தையடைய வேண்டுமென்கிற உணர்ச்சியை உண்டாக்கி எல்லோரும் ஒரே கடவுளுடைய குழந்தைகளென்கிற உணர்ச்சியை உண்டாக்கக் கூடியது. கூட்டுறவு இயக்கம் அபிவிருத்தியானுல் நம்முடைய தேசத்தில் பணக்காரர்களுக்கே மாத்திரம் பணம் சேர்வதும், உத்தியோகஸ்

தர்களுக்கேமாத்திரம் செல்வ விருத்தியும் செளகரியங்களும் உண்டாவதும் நின்றுவிடும். எல்லா ஜனங்களும் பயிரிடுவோர்களும், தொழிலாளிகளும் ஜன பஹுளமும் க்ஷேமத்தையும் செல்வத்தையும் அடைவார்கள். ஜனங்கள் சஹகார உணர்ச்சியுடன் ஒத்து உழைத்து குறைவில்லாமலும் சண்டை சச்சரவுகளில்லாமலும் வாழ்வார்கள். கூட்டுறவில்லாத தற்காலத்தில் அவர் அவர் அவருக்கே என்கிற நோக்கத்துடன் ஜீவிக்கிறார்கள். பிறரோடு ஒத்துழைத்து பிறருடைய க்ஷேமத்தையும் தங்களுடைய க்ஷேமத்தைப்போல நாடவேண்டியதாய் போதிக்கிற உணர்ச்சிகூட்டுறவு உணர்ச்சி. இவ்வுணர்ச்சி அதிகமாக கைக்கொள்ளப்பட்டால் ஜனங்களுக்கு க்ஷேமமும் செல்வமும் ஏற்படுவதுடன் அவர்களுடைய தெய்வபக்தி, குணங்கள், சீலம் முதலியவைகள் சீராகிவிடும்.

கூட்டுறவு இயக்கம் பயிரிடுவோருக்கும் தொழிலாளிகளுக்கும் சரியான வருமானத்தைக் கொடுக்க முயலுகிறது. தற்காலத்தில் வேலை செய்யாத மூலதனக்காரர்களும் தரகர்களும் பணக்காரர்களும் அளவுக்கு மீறி லாபங்களை அடைகிறார்கள். அவர்கள், இவ்விதமாக நியாயமாய் பயிரிடுவோரும் தொழிலாளிகளும் அடையவேண்டிய வருமானத்தை சுலபத்தில் அடைந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட சீர்கேடுகளை யொழித்து பயிரிடுவோருக்கும் தொழிலாளிகளுக்கும் அதிக வருமான மேற்படவேண்டிய நிமித்தம் கூட்டுறவு மேல் மேலும் அநுஷ்டிக்கப்படவேண்டியது. ஆகவே வேலை செய்யாமல் ஒருவனும் சம்பாதிக்கமுடியாது என்கிற விஷயத்தை கூட்டுறவு விருத்தியால் ஜனங்கள் நன்றாய் அறிவார்கள். மேன் மேலும் உழைத்து சம்பாதிக்கவும் அவர்கள் முயலுவார்கள்.

## கிராமாந்தரங்களில் கூட்டுறவு முயற்சிகளும் கிராமாந்தரச்சீரமைப்பு முயற்சிகளும்.

கூட்டுறவானது மனிதர்களுடைய எல்லாவித செல்வ உற்பத்தி முயற்சிகளிலும் அநுஷ்டிக்கப்படக்கூடியது. தனித்தனி நபர்கள் தனித்தனியாக முயற்சிகளைச் செய்தால் ஏற்படக்கூடிய பயன்களைக் காட்டிலும் அவர்கள் ஒன்றுசேர்ந்து முயற்சிகளைச் செய்தால் செல்வ உற்பத்திகளும் செளகரியங்களும் ஏராளமாக ஏற்படும். நம்முடைய



மாஹாணத்தில் கூட்டுறவியக்கமானது கிராம ஜனங்களின் அபிவிருத்தியின் பொருட்டு வேலை செய்துகொண்டு வந்திருக்கிறது. 22 வருஷங்களாக கூட்டுறவு திரவ்யஸஹாய இயக்கமானது வேலை செய்ததில் கிராம ஜனங்கள் சங்கங்களாக அமைந்து வேலை செய்தால் பிறரொத்தாசையின்றி தங்களுடைய பலத்தையும் சக்தியையும் கொண்டே சரியானபடி தங்களுடைய பயிர் முயற்சிகளைச் செய்து மிகுந்த பயன்களையடையக்கூடும் என்பதை தெளிவாக நிரூபித்திருக்கிறது. மேலும், கூட்டுறவு திரவ்விய ஸஹாயச்சங்கங்கள் கடன்களை எளிதில் கிராம ஜனங்களுக்குக் கொடுத்தால் மாத்திரமே பயன்கள் தக்கபடி ஏற்படாது. அங்கத்தினர்கள் பணம் சேர்க்கும் மனப்பாங்கை வஹித்து பிறரொத்தாசையை நாடாமல் தங்களுடைய சக்தியையே ஆதாரமாக வைத்துக்கொள்ளவும் வேண்டும்.

பயிரிடுவோர்களின் பலவித முயற்சிகளுக்குச்சாதகங்களையும் செளகரியங்களையும் ஏற்படுத்தவேண்டிய வகையில் கூட்டுறவு இயக்கமானது பாடுபடவேண்டும். அவர்களுடைய பயிர் முயற்சிகளுக்கு வேண்டிய கருவிகளையும் வஸ்துக்களையும் அவர்களுடைய யோக க்ஷேமங்களிற்கு வேண்டிய வஸ்துக்களையும் அவர்கள் அதிகச்சிலவில்லாமல் செளகரியமாக அடையவேண்டிய நிமித்தம் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். பயிரிடுவோருக்கு அறுவடையான பிறகு தங்களுடைய யோக க்ஷேமங்களுக்கு வேண்டிய அளவிற்கு மேல்பட்ட தான்யங்களை சரியானவிலைகளுக்கு விற்கும்படியாக பிரத்தியேக சங்கங்களும் ஏற்படவேண்டும். இவ்விதச்சங்கங்களில் ஏழை வியபாரிகளும் சேர்க்கப்பட வேண்டும். அவர்களுக்குப் பணம் வேண்டிய மட்டில் இல்லாவிட்டாலும் அவர்களுடைய ஊழியத்தை விலையாக்கிக்கொள்ளக்கூடும் பணக்காரர்களும் எல்லாவித செளகரியங்களையும் அவர்களே அடைந்து விடுவார்களென்கிற பயத்தின் பேரில் தள்ளப்படக்கூடாது. இவ்விதச்சங்கங்களில் இவ்விருவிதத்தவர்களும் சேர்க்கப்படவேண்டும்.

கடன்கொடுக்கிற விஷயத்தில் ஒவ்வொரு சங்கமும் கிராமங்களுக்கேற்றவாறு கடன்களை பொருப்பாளிகளுக்கு அவர் அவருடைய திருப்பிக்கொடுக்கிற சக்திக்குத்தக்கவாறு கொடுக்கவேண்டும் ஆனால்பயிர் யர்சிகளுக்கு பண உதவியானது வெகு தாராளமாகவும் அடிக்கடியும கொடுக்கப்படவேண்டியதாகத்தானிருக்கும். அப்படி தாராளமாகவும் தேவையானபொழுதெல்லாமும் கொடுக்கப்படாவிடில் பயிர்

முயற்சிகளிற்குக் கஷ்டமேற்படும். பிரதிகிராமமும் அதற்கேற்ற வாறு கடன்கொடுக்கிற ஏற்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வித ஏற்பாடுகளில் கிராமத்தார்களைத் தவிர அந்நியர்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சம்பந்தப்படக்கூடாது.

ஏற்கனவே பண்டை நாள்களில் நமது கிராமங்களிலிருந்த கூட்டுறவு வழிகள் ஆங்கில துரைத்தின காலத்தில் அழிவை அடைந்திருக்கின்றன. கிராம ஜனங்கள் ஐக்கிய வாழ்வை விட்டு தனிவாழ்வு வழிகளை அப்பியஸித்துக் கொண்டு மேனாட்டு நாகரீகங்களைக்கைப் பற்றி அதிகச்சிலவுடன் யோகக்ஷேமங்களை நடத்துகிறார்கள். அவர்களுக்கு இவ்வதிகச்சிலவிற்கு வேண்டியபடி வரும்படியோ இல்லை. கூட்டுறவை அவர்கள் கைப்பற்றி அப்பியஸித்தால் தான் அவர்களுக்கு செல்வ க்ஷேமவிருத்திகள் ஏற்படக்கூடும். தற்சமயத்தில் கிராமப்பஞ்சாயத்துகளிற்கு சட்டபூர்வமாக வரிவிதிக்கும் அதிகாரமும் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துகள் கிராமாந்தரங்களில் பலதுறைகளில் வேலைசெய்யப்போகின்றன. கவர்மெண்டாரும் பண ஒத்தாசையையும் இதர ஒத்தாசைகளையும் அவைகளுக்குச் செய்கிறார்கள். நாளளவில் அவைகள் திரண்ட திரவியத்துடன் இருக்கப்போகின்றன. அக்காலத்தில் வேண்டியமட்டில் திரவ்வியம் கிராம அபிவிருத்தி முயற்சிகளுக்கு அவைகளிடத்திலேயே ஏற்பட்டுவிடும். கிராம ஜனங்கள் கூட்டுறவு முயற்சிகளில் பயின்றிருந்தால் அக்காலங்களில் இவ்வித திரவ்விய சௌகரியத்தைக்கொண்டு கிராம முன்னேற்ற முயற்சிகளை நடத்தக்கூடும். அவர்கள் கிராம ஆக்ஷியையும் திறமையுடன் நடத்தக்கூடும்.

கிராமத்தார்கள் தங்களுக்கே தாங்கள் வரி விதித்துக்கொள்வதில் பூர்ணமனதாக விருக்கமாட்டார்கள். அவ்வித ஏற்பாடு அவர்களுக்கு ருசிகரமாகவிராது. கிராமத்தார்களுக்கு கல்விபோதனைகளும் கிராமங்களில் பிரச்சாரங்களும் இடைவிடாமல் நடத்தப்படவேண்டும். சம்பளமில்லாமல் தேசபக்தியுள்ள தேசாபிமானிகளால் மிக்க ஊக்கத்துடன் இவ்வித ஊழியங்கள் நடத்தப்படவேண்டும். பஞ்சாயத்தார்களும் இவ்வித உணர்ச்சிகளுடன் வேலைசெய்ய வேண்டும். கூட்டுறவு ஸ்தாபனத்தவர்களும் இப்படியே வேலைசெய்ய வேண்டும். வியவஸாயம் ஓங்கினால் கிராமங்களுள் சம்பளமில்லாமல் தியாக குணத்துடன் வேலைசெய்யக்கூடிய தேசாபிமானிகள் வேண்டிய மட்டில் ஏற்படுவார்கள்.



இப்படி ஏற்படும் தலைவர்கள் கிராமாந்தர ஜனங்களுக்குச் சௌகரியத்துடன் ஜீவிப்பதற்கு வேண்டியக் குறைந்தவருமான அளவையும் பயிர்வேலையில்லாத காலங்களில் அவர்கள் அநுஷ்டிக்கக் கூடிய இதர தொழில்களையும் எற்படுத்த முயலவேண்டும். சர்க்கார் இலாக்காகளாகிய வியவஸாய, கூட்டுறவு, மாட்டுவைத்திய, தொழில், தொழிலாளி, இவ்விலாகாக்கள் ஒன்று சேர்ந்து தளராமல் வேலை செய்ய வேண்டும்.

---

## Slate Industry in Kurnool.

### கர்நூல் ஜில்லாவில் கற்பலகைத் தொழில்.

1921ம் வருஷத்தில் கர்நூல் ஜில்லாவில் மார்க்காப்பூர் தாலூகாவில் கற்பலகைத் தொழில் உண்டாக்கப்பட்டது. மாஹாயுத்தம் முடிந்த பொழுது உடனே ஜெர்மனி வியாபாரம் குறைவுப்பட்டிருந்த பொழுது கர்நூல் ஜில்லாவின் கற்பலகை வியாபாரிகள் மிகுந்த லாபங்களையடைந்தனர். இந்த லாபங்களைப்பார்த்து கம்பம் தாலூகா ஜனங்களும் கற்பலகை தொழிலைக் கைப்பற்றினார்கள். ஆனபோதிலும் கொஞ்சகாலத்திற்குள் கம்பம் தாலூகாவில் இந்தத்தொழில் அழிந்து போய்விட்டது. மார்க்காப்பூர் தாலூகாவில் அது ஓங்கிவருகிறது. அதற்குக்காரணம் மார்க்காப்பூர் தாலூகாவானது வெங்கடகிரி ஸம்ஸ்தானத்திய கற்பலகைப்பாறைகளுள்ள மலைகளுக்கு அருகேயிருப்பதுதான். ஒருவண்டி கற்பலகைக்கற்கள் மார்க்காபூரில் அந்த மலைகளினிடத்திலிருந்து எல்லாச்சிலவுடன் 5 ரூபாய்க்குக் கொண்டுவரப்படக்கூடுமாம் கற்பலகை வர்த்தகம் 12 முதலாளிகளால் மார்க்காப்பூரில் வெகு நன்றாய் நடத்தப்பட்டுவருகிறது. பலகைகளிற்கு வேண்டிய சட்டங்களுக்காக வேண்டிய மரம் நிஜாம் இராஜ்யத்தின் காடுகளிலிருந்து அதிகச் சிலவில்லாமல் தருவிக்கப்படுகிறது. கற்பலகைத் தொழில்ச்சாலைகளிலும் ஒரோரு தினுசு வேலையும் அதற்கென்ற பிரதியேக தொழிலாளிகளால் செய்யப்படுகிறது. பாறைகளிலிருந்து பலகைகளையுரித்து அவைகளை தேய்க்கிறவர்கள் ஒரு வகுப்பாகவும், மரத்தை அறுக்கிறவர்கள் மற்றொரு வகுப்பாகவும் மூலைகளை வெட்டுகிறவர்கள் மற்றொரு வகுப்பாகவும், சட்டங்களைச் செய்கிறவர்கள் இன்னொரு வகுப்பாகவும் தனித்தனியாக வேலை

செய்கிறார்கள். முதல் வகுப்பு வேலைக்காரர்கள் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 6 அணா விகிதமும், இரண்டாம் வகுப்பினர் 7 அணா விகிதமும், மூன்றாம் வகுப்பினர் 2விகிதமாகவும் நான்காவது 2விகிதமாகவும் கூலிகளையடைகிறார்கள். தவிர மரத்தை இழைக்கப்பட்டவர்கள் 1 அணா விகிதம் கூலியையடைகிறார்கள். ஒரு பெட்டி கற்பலகைக்கு 5 அணாவிலிருந்து 9 அணாவரையில் லாபம் கிடைக்கிறது. நமது தேசத்திலுள்ள எல்லாவிடங்களிலிருந்தும் மார்க்காப்பூர் கற்பலகைகளுக்கு ஆர்டர்கள் வருகின்றன. 3000 பெட்டிகள் மாசந்தோறும் செலவாகின்றன. 200, 300 மனிதர்கள் இந்தத் தொழிலில் வேலை செய்கிறார்கள்.

---

# நமது பத்திரிகை

இந்த சஞ்சிகையிலிருந்து "ரூரல் இந்தியாவின்" மூன்றாம் வால்யூம் தொடங்குகிறது. பத்திரிகை ஆரம்பமாகி இரண்டு வருஷங்களாய் விட்டன. பத்திரிகையானது கிராமப்பஞ்சாயத்தின் முன்னேற்ற சம்மந்தமாகவும் கிராம ஜனங்களின் க்ஷேமத்தின் பொருட்டும் கிராமப்பஞ்சாயத்துகள், ஐக்கிய ஸ்தாபனங்கள், தொழிலபிவிருத்தி, கிராமச்சுகாதாரம் இவைகளின் சம்பந்தமாக வியாஸங்களை சஞ்சிகைகளில் பிரசுரித்து வந்திருக்கிறது.

விசேஷ ஞானத்தையும் அநுபவங்களையுமுள்ள நிபுணர்களால் வியாஸங்கள் அடிக்கடி எழுதப்பட்டு வந்தன. அவைகள் ஆவலோடு பஞ்சாயத்தார்களினாலும் இதர நண்பர்களாலும் படிக்கப்பட்டு வந்திருக்கின்றனவென்பதே தேச நன்மையின் பொருட்டு பத்திரிகை உயர்வான ஊழியத்தைச் செய்கிறதை நிரூபிக்கிறது. பஞ்சாயத்தார்கள் பஞ்சாயத்துகளில் மாஸந்தோறும் மீடிங்கு கூடி அந்தந்த மாஸத்தில் வெளியாகி வந்த சஞ்சிகையிலுள்ள விஷயங்களைப்பற்றி கிராம ஜனங்களுக்கும் உபந்நியஸித்து வந்து கிராம ஜனங்கள் கிராமப்புனருத்தாரண வழிகளில் சிரத்தையையெடுத்துக்கொண்டு பாடுபடும்படிச்செய்ய வேண்டும். முக்கியமாக, கிராம ஜனங்கள் சத்தியம், நாணயம், சீலம், ஒழுக்கம், மனச்சாக்ஷியம் இவைகளைக்கொண்டு நடக்கமுயல வேண்டும். கடவுள் நம்முடைய நடைகளையும் மனதை



யும் எப்பொழுதும் கவனிக்கிறாருகையால் நாம்செய்கிற ஒவ்வொரு தப்புத்தவறும் அவருக்குத் தெரியாமலிருக்கவில்லை யென்பதை ஒவ்வொருவரும் அறிந்து நடந்துகொள்ளவேண்டும் அடுத்தபடியாக, அவரவர் யோக க்ஷேமம் அவரவர் குடும்பயோக க்ஷேமத்தையும் சமூகயோக க்ஷேமத்தையும் பொருந்தியிருக்கின்றன வென்பதையும் ஒவ்வொரு வரும் நன்றாயறிய வேண்டும். ஆகவே, கிராமத்தவரொவ்வொருவரும் கிராம ஸமூகத்தின் க்ஷேமத்தைக்கருதியே வேலைகளைச்செய்யவேண்டும். அவர் அவர் அவருக்கேயென்ற மனதுடன் அவர்கள் வேலை செய்தால் அல்பசுகம் கொஞ்ச நாள்கள் வரையில்தான் ஏற்படும். சமூக நன்மையைக்கருதி சமூகத்தோடொத்து ஒவ்வொருவரும் வாழ்வை நடத்தவேண்டும். பண்டை காலத்தில் சமூக வாழ்வு ஏற்பாடுகள் கிராமங்களில் அதிகமாகவிருந்தன. தற்காலத்தில் அவ்வேற்பாடுகள் அழிந்துவிட்டன. கிராம சமூக ஏற்பாடுகள் குறைந்தமையால் தேசத்திலே தரித்திரம் ஏற்பட்டுவிட்டது. மேற்சொல்லிய சீர்கேடுகளை யொழிப்பதற்குத்தான் கிராமப்புனருத்தாரண இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. சமூகக்காடுகள் கிராமத்தார்களுக்கு மேய்ச்சலுக்காகவும் வியவஸாயத்திற்கு வேண்டிய எருவிற்காகவும், அடுப்பிற்கு விறகுக்காகவும் சுகாதார மேன்மைக்காகவும் இன்னும் அநேகவித நன்மைகளுக்காகவும் உபயோகப்படவேண்டிய நிமித்தம் காருண்ய கவர்மெண்டாரால் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளுக்கு ஒப்பிவிக்கப்பட்டன. ஆகவே, கிராமாந்தரப் புனருத்தாரணத்திற்கு சமூகக்காடுகள் அவசியமானவை. கிராமத்தார்கள் சகலவித செல்வ விருத்திகளை இவைகளைக் கொண்டு அடையக்கூடும். ஆனபோதிலும் அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களையும் ஐக்கியமுறைகளையும், வியவஸாய முன்னேற்ற வழிகளையும், சுகாதார உயர்வு முறைகளையும் கைப்பற்றினாலொழிய கிராமாந்தரப் புனருத்தாரணம் சரிவர ஏற்படாது. மேற்சொன்ன விஷயங்களையும் மேல் மேலும் வற்புறுத்திச் சொல்வதற்கே நமது பத்திரிகை முயலுகிறது. மேல் மேலும் இவ்விஷயங்களைப் பற்றி வியாஸங்களை அதிகமாக பிரசுரிக்க வேண்டுமென்று கோருகிறோம். பஞ்சாயத்தார்கள் அவர்களுடைய நண்பர்களுக்குச் சொல்லி அவர்களைச் சந்தாதாரர்களாகச் செய்தால் மேற்கொண்ட செலவிற்கு பணமேற்படுமாதலால் அவர்கள் இவ்வித ஊழியத்தை முக்கியமாக எண்ணி உடனே செய்யத் தொடங்குவார்களென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். பத்திராசிரியர் தளராமல் மேல் மேலும்

பத்திரிகைக்காக உழைத்து வருகிறார். இவ்வேலையிலே காலத்தை யெல்லாம் கழிக்கிறார். பஞ்சாயத்தார் யூனியனின் பிரஸிடெண்டும் யூனியனின் அபிவிருத்திக்காக ரொம்பப் பாடுபடுகிறார். பஞ்சாயத்தார்கள் அங்கங்கே யூனியன்களாகி, தாலூகா யூனியன்களையும், ஜில்லா யூனியன்களையுமேற்படுத்தி அவைகளை மாஹாண யூனியனுடன் தொடுத்துப் பிரச்சாரங்களையும் கிராமப்புனருத்தாரண வேலைகளையும் செய்ய ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

## வியவஸாயக் குறிப்புகள்

### கரும்பு.

கோயம்புத்தூரில் ஸ்தாபித்திருக்கும் கரும்பு அபிவிருத்திப் பண்ணையில் செய்து கொண்டிருந்த வேலை ஆதிமுதல் கொண்டு வட இந்தியாவில் பயிரிடும் கரும்புகளை விருத்தி பண்ணுகிறதற்காக வேன்றே ஸ்தாபிக்கப்பட்டது. இதற்குப் பணஉதவி இந்தியா கவர்ன்மெண்டாரே கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் இவ்விராஜதானியில் பயிராகும் கரும்பு தினுசுக்களை அபிவிருத்தி செய்வதின் பொருட்டு தெலுங்கு ஜில்லாக்களில் அனக்காப்பல்லி விவசாயப் பண்ணைக்குச் சமீபமபாய் 50 ஏக்கர் நிலம் வாங்கி அதில் இவ்விராஜதானிக் கரும்புகள் அபிவிருத்திக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் இப்போது கட்டடங்கள் வேலை ஆரம்பித்திருக்கிருக்கிறது. இவ்விராஜதானி மண்ணியல்பு, சீதோஷ்ணம் ஜலவசதி முதலியவைகளை அநுசரித்து உண்டாக்கக் கூடிய கரும்பு தினுசுகளை கோயம்புத்தூரிலிருக்கும் கரும்புநிபுணர் ஆராய்ச்சிசெய்து சிலாக்கியகரமான தென்று சொல்லும் தினுசுகளையும் எந்தரங்கள் வைத்தால் இலாபகரமாய் மாசூல் கிட்டுமென்பதையும் போலொத்த விஷயங்களை இப்பண்ணையில் ஆராய்ச்சி செய்யப்படும். தற்காலத்தில் அனக்காபல்லி, சாமல்கோட்டா, பாலூர், என்று சொல்லப்பட்ட விவசாயப் பண்ணைகளில் அநேக தினுசு கரும்புகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவைகளில் ஜாவா 247ம், மோரீஸ் 55ம் கப்பரும் இப்போது சாதாரணமாய் கிருஷிகர்களால் ஜாஸ்த்தியாய்ப் பயிர் செய்யப்படும் பிஜி. பி



179373

என்னும் தினுசு கரும்பைவிட ஜாஸ்தி மாசூல்கள் கொடுத்திருக்கின்றன.

வரிசை வரிசையாய் நட்டுப் பயிர் செய்யும் விதத்தையும்வரிசைகளில்லாமல் அங்கங்கே நட்டு பயிர்செய்வதின் தாரதம்யத்தையும் பரீக்ஷித்துப் பார்த்ததில் சாதாரணமாய் ஊர் வழக்கத்தில் நடும் விதத்தைவிட வரிசைவரிசையாய் நட்ட பயிர்களிலிருந்து நூற்றுக்கு பத்தரை பங்கு ஜாஸ்தி மாசூல் கிடைத்திருக்கிறது. இந்த ஆராய்ச்சியால் திட்டமான அநுகூலங்கள் சில வருஷங்களாகக் கிடைத்திருப்பதால் இதை விவசாயிகள் கையாடும்படி தக்க ஏற்பாடுகள் சீக்கிரம் செய்யப்படும்.

எவ்வளவு தூரத்திற்கு கரும்பு வரிசைகளிருக்க வேண்டு மென்றும், ஒரு கணுவுக்கும் மற்றொரு கணுவுக்கும் எவ்வளவுதூரம் இருக்கவேண்டுமென்றும் செய்த ஆராய்ச்சிகளிலிருந்து நன்றாய்க் களைத்துப் பயிராகக் கூடிய ஜாவா(24)ஒத்த தினுசுகளை நெருக்கமாய் நடாமல் ஜாஸ்தியிடம் விட்டு நடுவதினால் கரும்பு பயிர்செய்வதில் பிடிக்கும் சிலவுகள் கம்மியாகிறதென்று தெரியவருகிறது.

எரு விஷயமாய் செய்த பரீக்ஷைகளில் இயற்கை வசதிகளுள்ள நிலங்களில் மாத்திரம் கரும்பு பயிர் செய்வதில் லாபம்கிடைக்குமே யொழிய மற்றப்படி இயற்கை வசதிகள் அமையாத நிலங்களில் எவ்வளவு எருவிட்டாலும் தக்கபலன் கிடைக்கிறதில்லை யென்றும் தெரியவருகிறது.

பாலூர் விவசாயப் பண்ணையில் அநேக தினுசு புண்ணாக்குகளையும், புண்ணாக்குகளுடன் சல்பேட் ஆப் அம்மோனியாவைப்போலொத்த தளசத்தைக்கொடுக்கக் கூடிய எருக்களையும் கலந்து உபயோகித்தும் பரீட்சைசெய்து பார்த்ததில் முத்துக் கொட்டை புண்ணாக்கும் நிலக்கடலைப் புண்ணாக்கும் அனேகமாய் ஒரே மாதிரி நல்ல பலன் கொடுத்திருக்கிறது. ஆனால் மணிலாக் கொட்டைப் புண்ணாக்கு எருவாய் உபயோகித்ததில் சற்று சிலவு கம்மியாயிருக்கிறதென்று தெரிகிறது. மீன் குவானோ-போட்டுப் பார்த்ததில் அவ்வெரு ஜாஸ்தி விலையா யிருப்பதால் தக்க லாபம்கொடுக்கவில்லை.

கரும்புப் பயிர் செய்வதில் பிடிக்கும் சிலவைக் குறைக்க எவ்விதம் செய்தால் அநுகூலமாகுமென்று ஆராய்ச்சிகள் செய்ததில்

பிப்ரவரி மாதத்தில் கரும்பு புள்கள் ஒருசிறு இடத்தில் நட்டு ஆகஸ்ட்டு மாதம் வரையும் அதை வளரவைத்து அப்பால் அப் பயிரைக் கணுக்களாக வெட்டி வேறு இடத்தில் நடுவதினால் ஜாஸ்தி விஸ்தீரணத்தில் நட்ட கரும்பு கிடைப்பதுடன் கணுக்களும் பழுது போகாமல் முளைக்க இடமிருக்கிறது. இதுடன் கரும்புப்பயிர் செய்யக்கூடிய இடங்களில் ஆகஸ்டு மாதத்திற்கு முன் ஒரு குருகிய நெல்பயிரும் அருவடை செய்துகொள்ளக் கூடுமென்றும் தெரிய வருகிறது.

## தென்னை.

முன் வருஷத்தில் சொல்லிய பிரகாரம் நல்லவிதைகளைப் தெரிந்தெடுப்பதும், இருஜாதிகளைப் பிணைத்து அதிலிருந்து நல்ல ஜாதிகளைத் தெரிந்து எடுக்கக் கூடிய வழிகளை விவரித்திருந்த பிரகாரம் வேலைகள் செய்து நெத்துகள் பொருக்கியெடுத்து அவைகளிலிருந்து நாத்துகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளினுடைய பலன் தெரிய இன்னும் குறைந்தது 7 வருஷத்திற்கதிகமே செல்லும். தென்னைகளுக்கு எருவிடுதல், எவ்வளவு தூரத்தில் நடவேண்டுமென்றும் எத்தனை வருஷத்து மரத்திலிருந்து விதைப்பொருக்கவேண்டுமென்ற விஷயத்தைக் குறித்த ஆராய்ச்சிகள் நடந்தேறி வருகின்றன ஆனால் இதுவரை கிடைத்திருக்கும் அநுபோகங்களிலிருந்து முடிவான தீர்மானம் சொல்ல இன்னும் சில வருஷங்கள் செல்ல வேண்டும்.

## வாழை

சாமல் கோட்டா விவசாயப் பண்ணையில் அநேக தினுசு வாழைகள் பயிரிடப்பட்டு வருகின்றன. அதில் 3 தினுசுகள் அதாவது சக்கரகேளி, மோரீஸ், பொந்தன் தினுசுகளிருந்து எக்கர் ஒன்றுக்கு 664 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. இன்னும் இப்பயிரில் ஆராய்ச்சிகள் செய்து கொண்டு வருகிறார்கள். அதிக எருவிடுவதினாலாவது அல்லது வேறு விதங்களினாலாவது ஒரு தினுசைஜல்தியாய்க் காய்க்கச் செய்யக்கூடுமாவென்று பரீட்சித்து வருகிறார்கள்.

## கால்நடைத் தீவனப்பயிர்

தற்காலத்தில் கிருஷிகர், புகையிலை, பருத்தி, மணிலாக்கொட்டை, கரும்பு முதலிய பயிர்களிலிருந்து தக்கலாபம் அடைகிறதினால் மாட்டுத் தீவனத்திற்கென்று கால் நடைத் தீவனப் பயிர்களைப் பயிர்



செய்வதே கிடையாது. இக்குறைவால்தான் மாடுகள் சரிவரவளர்வதில்லை யென்றும் எவ்வித சீர்திருத்தங்கள் செய்தால் இக்குறைத்தீருமென்றும் விவசாய டிபாரட் மெண்டார் யோசித்ததில், மழைகாலங்களில் கலப்பாய் விதைத்து அறுக்கக் கூடிய சோளம் முதலாகிய பயிர்களையும், அக்காலத்தில் ஏராளமாய்க் கிடைக்கக் கூடிய புல் தினுசுகளையும் அறுத்து அவைகளை குழிகளில் போட்டு சில நாள் பழுவேத்தி மூடி வைத்து கோடைகாலத்தில் தீவனத் தட்டுப்பாடாயிருக்கும் போது அக்குழிகளைத்திறந்து அதில் போட்டிருக்கும் புல்லையும் சோள நாத்து முதலியவைகளையும் எடுத்து மாடுகளுக்கு உபயோகித்து வந்தால் உபகாரமாயிருக்குமென்றெண்ணி இவ்விராஜதானியிலுள்ள ஹோசூர் முதலிய இடங்களிலுள்ள கால் நடைப் பண்ணைகளில் மழைகாலத்தில் மேற் சொன்ன பயிர்களை வளர்த்து 383டன் (1டன் 2 வண்டிபாரம்) பச்சைச் சோளங்களைக் குழியில் போட்டு கோடை காலத்தில் எடுத்துத் தீவனமாய் உபயோகித்ததில் கால் நடைகள் நன்றாய்ச்சாப்பிட்டதாகத் தெரியவருகிறது. இப்படிச் செய்வதில் 100 ராத்தல் சோளம் குழியில் போட்டால் எடுக்கும் போது 81 ராத்தல் இருப்பதாகத் தெரியவருகிறது. மழைகாலத்திலும் குளிர்காலத்திலும் எங்கும் ஜாஸ்தியாய் முளைக்கும் புல்லுகளை முளைக்கும் தருணத்தில் அறுத்து இம்மாதிரி குழிகளில் போட்டு வைத்துக்கொண்டால் கோடைகாலத்தில், பச்சைப்புல் முதலான தீவனங்கள் அகப்படாமலிருக்கும் போது அக்குழிகளிலிருந்து புல் எடுத்துத் தீவன மாக்கிக் கொள்ளலா மென்ற விஷயம் எல்லாக் கிருஷிகரும் கையாடவேண்டுமென்றே இவ்வாராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள்.

[கிருஷிகன்.]

## மாதுளை.

இந்தியாவின் வடமேற்குப் பாகத்திலுள்ள காபூல், பர்ஷியா முதலிய இடங்களிலும், இமயமலைச் சாரலிலும் ஏதேச்சையாகக் காணப்படுகிறது. தென்னிந்தியாவில் அநேக தோட்டங்களில் மாதுளைச் செடிகளிருப்பினும் அவைகள் சரிவரப் பாதுகாக்கப்படாதவைகளாகவும், நல்ல சாதியைச் சாராதவைகளாகவுமிருக்கின்றன. ஊத்துக்குளி போன்ற சிற்சில இடங்களில் மாதுளைக்கு தென்னிந்தியாவில் பெயர் பெற்றவைகளாகவுமிருக்கின்றது இப்பக்கங்களில் பூச்சிகளால் துளைக்கப்பட்டும் அணில்களால் கடிக்கப்பெற்றும்,

வீணில் பல பழங்கள் கவனமின்றி நாசமடைகின்றது. கவனத்துடன் பயிர் செய்தால் நல்ல லாபம் தரக்கூடியது.

நிலம் :—மித உஷ்ணப் பிரதேசங்களில் எல்லா நிலங்களிலும் பயிராகின்றது செவ்வல் நிலங்களே இதற்கு அனுகூலப்பட்டிருக்கின்றது. என்றாலும் கரிசல் முதலிய எல்லா நிலமும் இதற்கு ஏற்றதாகும். வடிகால் வசதிகள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். தண்ணீர் தேங்குமிடங்கள் கூடா.

வகை :—இதில் இனிப்பு, புளிப்பு என பொதுவாக இருவகை ஏற்பட்டிருப்பினும், வெள்ளைப் புஷ்பத்துடனும், அதன் வித்து வெண்ணிற முடைத்தும் உள்ள வகை ஒன்றும், செவந்தபுஷ்பமும் செவந்த நிறங்கொண்ட விதைகளைக் கொண்டுளது மற்றோர் வகையுமாகும். பிந்தியதோ ரசம் அதிகம்கொண்டு, இனிப்பும் கூடியதாகும். நமது நாட்டில் நல்ல இனிப்பும், பருத்துமுள்ள ஜாதி வகைகள் ஊத்துக்குளி பக்கங்களில் பெறலாம். வடஇந்தியா நாட்டுப் பழமெனவும் பாட்னவகைப்பழம் எனவும் இருவகை உள்ளது. பிந்திய வகைப்பழமே இனிப்புள்ளதாக விருப்பதால் அநேகரால் விரும்பப்படுகிறது.

(1). ஷாமி :— தோல் சிவந்து, சிறு விதைகளுடன் இனிப்பாயிருப்பது. குழந்தையின் தலையளவு பெரியதாகவுள்ளது.

(2). துருக்கி ,— மேல் தோலும், விதையும் வெளுப்பு, பழம் பெரிதாகவுள்ளது.

(3). மிஸ்ரி :—தோல் பசுமை அல்லது பச்சை, பழம் கொஞ்சம் புளிக்கும்.

கிற்க, காபூல் வகைகள் என பங்களூரில் ஓர் வகை கிடைத்து வருகின்றது. இதன் விதைகள் சிகப்பு. இனிப்புள்ளது. மேல் தோல் காய்ந்தாலும் உள் விதை நீர் சுண்டுவதில்லை. நமது நாட்டில் இந்த ஜாதி வருவித்துவைப்பது நலம். ஊத்துக்குளி பழமும் சிலாக்கியந்தான்.

மாதுளை வைக்கும் விதம் :— (1) விதைபோட்டு செடியாக்கலாம். (2) பதிகம் போட்டு எடுத்து நடலாம். (3) ஒட்டுக்கட்டி



எடுத்து நடலாம். (4) தூர்களைப் பெயர்த்து எடுத்து நடலாம். விதை போட்டு பயிர் உண்டாக்குவதனால் நல்லதாகத் தெரிந்து எடுத்து எடுக்கப்பட்ட பழத்தில் உள்ள விதைகளை எடுத்து ஓர் துணியில் வைத்து மெதுவாக நசுக்கி அந்த ஈரத்தை நீக்கிவிட்டு சாம்பலில் பிரட்டி கொஞ்சம் உலர்ந்ததும் விதைப் பாத்திகளில் போடவேண்டும் விதைகளை உலரவைக்கக்கூடாது.

பெரிய செடிகளிலுள்ள நல்ல திடமான கிளைகளை பூமியிலாவது, மூங்கில் கூடைகளில் மண் நிறப்பி அவைகளிலாவது வளைத்து மேல் மண் மூடி அதன்பேரில் ஜலம் ஊற்றிவந்தால் நாளாவட்டத்தில் வேர் விட்டுவரும். இப்படி செய்வது தை மாதத்தில்தான் செய்ய வேண்டும். வேர் பிடித்தவுடன் பெரிய மரத்தில் உள்ள கிளையை நறுக்கிவிடலாம்.

சிறு மூங்கில் கூடையில் விதையின் நாற்றை எடுத்துவைத்திருந்து அவைகள் வாடாமல் செழித்திருக்கும் சமயம் நல்ல ஜாதி பெருமரங்களின் கிளையில் கொஞ்சம் சீவி இச்சிறு நாற்றிலும் சிறிது சீவி பால் காயுமுன் இரண்டையும் ஒன்றாய்ப் பிணைத்து மெழுகு சீலை சுத்தி நன்றாய் கயிற்றால் கட்டி மண்பூசி ஜலம் விட்டுவருவதால் இரண்டும் ஒன்று சேர்ந்துவிடுகிறது. சிறிது நாட்பட்டதும் பெரிய மரத்தின் கிளையைத் தரித்து விடலாம்.

மாதுளைச்செடியின் அடியில் வேர் வெடித்து சிறு செடிகள் உண்டாவதுண்டு. இவைகளையும் எடுத்து நடலாம் இப்படி தயார் செய்த செடிகள் ஒரு வருடம் கழிந்ததும் எடுத்து குழியில் நடலாயக்காகும்.

10 அடிக்கு ஒன்றாக குழிகள் வெட்டி அவைகளை ஆறப் போட்டு பின் மக்கின எருவையும் மண்ணையும் கலந்து குழியில் போட்டு செடியை நடவேண்டும். இப்படி நடுவதில் ஏக்கருக்கு 450 குழிகள் நடலாகும். செடிகள் வேர் பிடிக்கும்வரை மழை இல்லாவிட்டால் ஈரம் பார்த்து ஜலம் விட்டு வரவேண்டும்.

பின் செய்நேர்த்தி :—பிரதி வருடமும் மாதுளந்தோட்டத்தைக் கொத்தி ஆட்டெரு, மக்கின குப்பை, மீன் உரம் முதலியவைப் போட்டுவரவேண்டும். கோடையில் தண்ணீர் இறைத்து வரவேண்டும்.

காப்பு :—நட்ட 2 வருடங்களுக்கெல்லாம் காய்க்கவாரம்பிக்கும். சுமார் 10, 15 வருடங்கள் வரை காய்த்துவரும், செடிகள் முதிர்ந்துவிடில் காய்ப்பு குறைவுபடும். அப்போது வெட்டிவிடுவது நலம். நல்ல ஜாதியானால் செடி 1க்கு வருடம் சுமார் 50 பழங்கள் கிடைக்கும். அதற்கு மேலும் நிலத்தின் வளத்தைப் பொருந்தும் செய்நேர்த்தியைப் பொருத்தும் கிடைக்கக்கூடும்.

பூச்சிகள் :—இப்பழங்கள் ஓர் வகை சிறு பூச்சி மாதுளம் பிஞ்சின் மீது முட்டை யிடுகின்றது. முட்டையினின்று புழு வெளிவந்து பிஞ்சைத் துளைத்து காயைக் கெடுத்துவிடுகின்றது. அணில்களாலும் இவைகளுக்கு மோசம் எற்படுவதுண்டு.

இதன் வைத்திய உபயோகம் :—இதன் ஒவ்வொரு பகுதியும் மருந்துக்கு மிகவும் உபயோகமானவை. மாதுளம்பழத் தோலிலிருக்கும் டானின் என்ற துவர் பதார்த்தம் சங்கோசகாரி (Astringent) சீதபேதி, அஜீரணபேதி முதலிய ரோகங்கள் ஆரம்பமாகும்பொழுது இத்தோலில் ஒருபங்கும், வெந்நீர் பத்துப் பங்கும் கூட்டி வாசனைக்காகக் கொஞ்சம் கிராம்புத்தூள் கூட்டி கால்மணி நேரம் கொதிக்கவைத்து வடிகட்டி 2 அவுன்சு வீதம தினம் 3 வேளை கொடுத்தால் குணமுண்டாகும்.

மாதுளம் வேர்ப்பட்டை கிருமியைப் போக்க கஷாயம் போட்டுக்கொடுத்து பின் பேதிக்குக் கொடுக்கலாம்.

மாதுளம்பழத்தின் ரசம் சுரத்தில் காணும் நாவறட்சியைப் போக்கும். மாதுளம் மொட்டு காசரோகத்திற்கு கொடுக்கலாம்.

மாதுளம் பழ ரசம் கண்ரோகத்திற்கு பாவிக்கப்படுகிறது. மிகவும் குளிர்ச்சியைத் தருவது.

[இந்திய வியவஸாயம்].

## எருக்கு.

உபயோகம்:—நெல் வயல்களுக்கு இதை வெட்டி உரமாக உபயோகிக்கலாம். களர் நிலங்களுக்கு இதைப் போடுவதனால் மண் மேன்மைப்படுவதாகக் கருதப்படுகின்றது. இதன் தழைகள் சீக்கிரத்தில் மக்குவதால் நாற்றங்காலுக்கு விசேஷமாக உபயோகமாகின்றது. தரிசு நிலங்களில் இதைப் பயிரிட்டுவந்தால் நஞ்சை நிலங்களுக்கு எருவுக்கு அலையவேண்டிய கவலையிருக்காது. ஒரு எக்கரில் கிடைக்கும் தழை 6 முதல் 8 ஏக்கர் வரை நஞ்சை நிலங்களுக்கு எருவாக்க உதவும். ஒரு வருடத்தில் சுமார் ரூ. 100 பெருமான தழைகள் கிடைக்கும். விதைத்த 2 வருடத்தில் தழை வெட்ட லாயக்காகும் இது, புங்கந்தழை, ஆவாரந்தழை இவைகளைக் காட்டிலும் குறைந்த எருச்சத்தை தரக்கூடியதாக விருப்பதால், அளவுகூட்டி இதைப் போடவேண்டும்., ஏனைய தழைகள் ஏக்கருக்கு 2000 ராத்தல் போடுவதனால் இது 4000 ராத்தல் போடவேண்டிவரும். நிலத்தின் செழிப்பைக் கவனித்து இதைப் போடவேண்டும். முதல் வருடம் அதிகம்போட்டால் மறு வருடம் குறைத்துக்கொள்ளலாம்.



மைசூர் விவசாய இலாகாதார் இதன் ரசாயனக்கூறுபாட்டை பின்வருமாறு தெரிவிக்கின்றனர்.

| எருக்கம் இலைகள் :— | 100க்கு |
| --- | --- |
| வெடியுப்பு சத்து Nitrogen | 0-42 பங்கு |
| பாஸ்கரம் Phosphoric acid | 0-12 பங்கு |
| சாம்பல்காரம் Potash | 0-13 பங்கு |

இதில் காணப்படும் கந்தகசத்து பயிர்களுக்கு நோய் உண்டாகா வண்ணம் காற்பதுமன்றி பூச்சிகளின் தொந்தரவையும் ஒருவாறு விலக்குகின்றது. பின்னும் இதில் காணும் கந்தகசத்து மண்ணினுள்ள இதர கரையாத அம்சங்களைக் கரையவைத்து பயிருக்கு உணவாக உதவச்செய்கிறது.

இச்செடியினின்றும் கசியும் பாலினின்று இந்தியாரப்பர் செய்யக்கூடுமாம். தேள் கொட்டின இடத்தில் இதன் பாலைத் தடவி அணலில் காட்டினால், வலி ஒருவாறு நீங்குகின்றது.

செடியின் தண்டினின்று பிரித்தெடுக்கப்படும் நாரினின்று செய்யப்படும் கயிறு மிகவும் கெட்டியாகவிருப்பதால், வில்லின் நாண் கயிறாகவும் அரைஞாண் கயிறாகவும் உபயோகப்படுகின்றது.

இதன் காயினின்றும் கிடைக்கும் பஞ்சிலிருந்து மெல்லிய உடைகள் நெய்யக்கூடுமானாலும் போதுமானவளவு கிடைக்காததனால் விசேஷ விருத்தியடையவில்லை. தலையணைகளுக்கு இப்பஞ்சைப் போட்டு உபயோகிப்பதால் தலைவலி ஜலதோஷம் இவை நீங்குவதாகச் சொல்லுகின்றனர்.

வேரினின்று பிரித்தெடுக்கப்பட்ட பட்டை மருந்துகளுக்கு உதவுகின்றது.

[இந்திய வியவஸாயம்].

## கருணைக்கிழங்கு

இது திருமயம் தாலூகாவில் விராச்சிலை, கண்ணனூர் முதலிய இடங்களில் குடியானவர்கள் அதிகம் சாகுபடி செய்து வருகிறார்கள்.

இந்தப்பயிர் சாகுபடி செய்வதினால் குடியானவர்களுக்கு தகுந்த லாபத்தைக் கொடுப்பதுடன், சாகுபடி செய்யும் பூமியை சீர்திருத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவருகிறது.

இந்தப்பயிரை வடிகால் வசதியுள்ள நஞ்சைகளில் வைகாசி, ஆனி மாதங்களில் சாகுபடி செய்கிறார்கள். நிலத்தை நெல் அறுவடையான பிறகு நன்றாக காயவிட்டு, பங்குனி மாதத்தில் மழை பெய்தால் அந்த ஈரத்தைக் கொண்டாவது, அல்லது கிணறுகளிலிருந்து, கபிலை (mhote) யைக்கொண்டு சாரம் கட்டி உழுது புழுதியாக்குகிறார்கள். பிறகு ஏராளமான சருகு, தொழு எரு இவைகளைப் போட்டு பிரட்டி உழுகிறார்கள். ஏக்கர் 1க்கு சுமார் 50முதல் 100 வண்டி வரை குளத்து வண்டல் அடிப்பது ரொம்பவும் சாதாரணமான வாடிக்கை. மேலும் தொழுஎரு, சுமார் 50 வண்டிவரை அடிக்கிறார்கள். இவைகளுடன் ஆட்டுக்கிடையும் நிறுத்துவதுண்டு நன்றாய் உழுது புழுதியானபிறகு ஏக்கர் 1-15 முதல் 17 ஆட்கள் வரை பாரிழுத்து தண்ணீர் வாய்க்காலும் போட்டுக்கொண்டு வரும் பொழுதே 20 பெண் கூலியாட்கள் விதை போட்டுவருவது வழக்கம். விதைக்கு விதை 6 அல்லது 8 அங்குலத்திற்கு மேலிராது. நல்ல நிலங்களாயிருந்தால் குளத்து வண்டல் மேல் சொன்னதின் பாதி இருந்தால் போதுமானது சாதாரணமாய் கருணைக்கிழங்குடன், மஞ்சளையும் கலந்து போடுவது சகஜம், ஆனாலும் கருணை மட்டிலும் போடுவதுமுண்டு. கலப்புப் பயிரில் மஞ்சளை கோழிக்காலொப்ப மாறியும் கருணைக்கிழங்கை பாரின் மத்தியில் வரிசையாயும் போடுவதுதான் வழக்கம். ஆனால் கிழங்குகளை ஒரு அடிக்கு ஒன்றாய் போட்டால் நல்ல மாசூலைக் கொடுப்பதுடன் கிழங்குகளும் பருமனாயிருக்கும். விதைகள் விதைத்த 20 நாட்களில் முளைக்க ஆரம்பித்து அதிலிருந்து ஒருமாதத்திற்குள் ஜாடா கிழங்குகளும் முளைத்துவிடும். விதைபோட்டு முடிந்த 2 நாளைக்குப் பிறகுதான் தண்ணீர் இறைக்கிறார்கள். ஆனால் இது விரும்பத்தக்கதல்ல. போட்டு முடிந்தவுடன் தண்ணீர் பாய்ச்சுவதுதான் நலம். இந்தத்தாமதத்திற்கு காரணம் வேலைத்தொந்திரவே. விதை முளைக்க ஆரம்பித்தபிறகு களை யெடுப்பதுதான் முக்கியம். கைக்கொத்துகளைக் கொண்டு, புற்பூண்டுகளை முளைக்கவொட்டாமல் கொத்திக்கொண்டே வருவார்கள். இந்தப் பயிரை சிலர் புரட்டாசி மாதத்தில் கிழங்குகள் இளசாய் இருக்கும் போழுதே கிராக்கியான விலைக்கு விற்கும் பொருட்டும் அடுத்தாற்போல் நெல் சாகுபடி செய்யும் உத்தேசத்தையும் கொண்டு வெட்டி விற்றுவிடுகிறார்கள். ஆனால் கிழங்கு ராசி கிடைக்காது. புரட்டாசி மாதத்தில் வெட்டாமல் நிறுத்திவைக்கும் குடியானவர்கள், கார்த்திகை மார்கழி மாதங்களில் சேத்துப்பட்டமென்று வாய்க்காலில் சேறைக் குழைத்து நன்றாய் மெழுகிவிடுவார்கள் இப்படிச் செய்த பிறகு அதிகம் களைகள் முளைக்கும். ஆனால் குடியானவர் இவைகளை எடுப்பதில்லை. இவைகளை உடனே எடுத்துவிட வேண்டியதவசியம். ஏனென்றால் இந்த வருஷத்திய களைகளின் விதைகள் மறு வருஷத்தில் முன்னிலும் பதின்மடங்கதிகமாக



உண்டாகும். என்பதோடு பூமியில் உள்ள உணவையும் திருடிவிடும் மேற்படி சேத்துப்பட்டம் கட்டும்பொழுது செடிகளெல்லாம் பழுத்து விழுந்துவிடும். இதுவே கிழங்குகள் முதிர்ச்சியடைந்ததற்கு அடையாளம். இந்த சமயத்தில் வயலில் தண்ணீர் நிற்காமல் வடித்துவிடவேண்டும். மேற்படி பட்டம் கட்டுவதினால் சூரியவெப்பம் கிழங்குகளில் தாக்கி கிழங்குகள் வெம்பிப்போய் விடாமல் தடுப்பதற்குத்தான். ஏக்கர் 1-க்கு மஞ்சள் 6-மூட்டையும் கருணை 18-மூட்டையும், கருணை மட்டில் விதைத்தால் 25-மூட்டையும் செல்லும். விதைத்த புதில் புடல், பாகல், வெண்டு முதலிய காய்கறிப் பயிர்களும் போடுகிறார்கள். இது விரும்பத்தக்கதல்ல. இந்தப் பயிருக்கு கோடைகாலத்தில் மாதத்திற்கு 4, 5-முறை தண்ணீர் பாய்ச்சவேண்டும். இம்மாதிரி 4-மாதங்கள் தண்ணீர் இறைத்தல் வேண்டும்.

பங்குனி மாதத்தில் கிழங்குகளை வெட்ட ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் இதற்கு முந்தியே வியாபாரத்திற்காக வெட்டிவிடுவார்கள். விதைக் கிழங்குகள் பங்குனிமாதத்தில் தான் வெட்டுகிறது வழக்கம். இந்த மாதங்களில் பூமி காய்ந்து கெட்டியாயிருக்குமாதலால் கிழங்கு வெட்டுவதற்கு 2, 3-நாட்களுக்கு முந்தியே தண்ணீரிறைப்பது வழக்கம். கூர்மையான கவைக் கொம்புகளைக்கொண்டு கிழங்குகளைத்தோண்டி நன்றாய் வேராய்ந்து சுத்தம் செய்து போர் போராக மரத்து நிழலில் குமிக்கிறார்கள். விதைவிதைக்கும் வரையில் கிழங்குகள் நிழலிலேயே இருக்கின்றன. ஒரு ஏக்கர் கிழங்கு வெட்ட 45-முதல் 50-பெண் கூலி ஆட்கள் வரை செல்லும். வெட்டு முடிந்தவுடன், நன்றாக உழுது சேப்பை, பறங்கி, கத்திரி முதலிய பயிர்களை சாகுபடி செய்கிறதுதான் வழக்கம், இந்தப்பயிர்களுக்கு எருவை போடுகிறதில்லை. இவை நல்ல மாசூலை கொடுப்பதுடன் மறு வருடத்தில் செய்யும் நெற்பயிரும் நல்ல மாசூலைக்கொடுக்கும். இந்தப்பயிரை சாகுபடி செய்வதினால் மண் பொலபொலப்பாயும் நல்ல வடிகால் வசதியுள்ள நிலமாகவும் ஆய்விடும் என்பதில் சந்தேகமில்லை.

சமஸ்தானத்திலுள்ள விவசாயிகள் எல்லோரும் தங்கள் தங்கள் நஞ்சைகளில் கேணிகள் இருக்குமிடத்திலும் அல்லது கிணறுகள் வெட்டி மேல் சொல்லிய பயிரை சாகுபடி செய்வதால்; நிலங்கள் சீர்திருத்தமாவதுடன் தகுந்த லாபமும் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. திருமயம் தாலூகாவில் விளையும் கிழங்குகள் மதுரை ஜில்லாவின் பெரும்பான்மையான இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றது. இதை சாகுபடிசெய்ய விரும்பும் குடியானவர்கள் விதைக்கிழங்குகள் தேவையிருந்தால் பங்குனி மாதம் முடிவுக்குள் திருமயம் விவசாய இன்ஸ்பெக்டரிடம் மனுச்செய்துகொண்டால் காலக்கிரமப்படி வாங்கிக்கொள்ளலாம்.

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் கூட்டுறவு இலாகா மற்ற இலாகாக்களோடு கலந்து வேலை செய்கிறது. வியவஸாய இலாகாவோடு சேர்ந்து எருக்களையும், வியவஸாயக்கருவிகளையும் வியவசாயிகளுக்கு வாங்கிக்கொடுக்கிறது. வியவஸாய விஷயங்களிலும் கூட்டுறவு விஷயங்களிலும் பிரச்சாரங்களையும் செய்கிறது. கூட்டுறவு உத்தியோகஸ்தர்களும் வியவஸாய இலாகா உத்தியோகஸ்தர்களும் ஒன்று சேர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு கிராமங்களில் உபந்நியாஸங்களைச் செய்கிறார்கள். நிரூபணக்காக்ஷிகளையும் அநேகப்பிரகாரம் நடத்துகிறார்கள். அநேக கூட்டுறவு சங்கங்கள் பாரெஸ்டுகளில் தேக்கு விருக்ஷங்களை நட்டு வளர்க்கின்றன. சில கூட்டுறவு சங்கங்கள் இராப்பள்ளிக்கூடங்களையும், ரீடிங்கு ரூம்களையும் நடத்துகின்றன. இன்னும் சில கூட்டுறவு சங்கங்கள் ஜனங்களின் வியவஹாரங்களை மத்தியஸ்தம் பண்ணித்தீர்க்கின்றன.

x x x

கொச்சி இராஜ்யத்தில் 1926-27 வருஷத்தில் கிராமப்பஞ்சாயத்துகள் நன்றாய் வேலை செய்திருக்கின்றன. மைனர் இரிகேஷன்வொர்க்ஸுகளைக்கட்டுவதிலும் ரிபேர் செய்வதிலும் நீர்ப்பாசனம் செய்வதிலும் முயர்ச்சி செய்தன. கிணறுகளையும் குளங்களையும் வெட்டியன. பொலம் போக்குகளிலுள்ள பாதைகளையும், சந்துகளையும், கால்வாய்களையும் ரிபேர் செய்தன கிராமங்களிலுள்ள சாலைகளை சீர்படுத்தியன சாலைகளின் ஓரங்களிலுள்ள மரங்களைபாதுகாத்தன ஸர்க்காரால் அமைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்ப் பந்தல்களைநிர்வஹித்தன கிராமச்சுகாதார நிலையை உயர்த்தியன கூட்டுறவு. சங்கங்களைகிராமங்களில் உண்டாக்கியன வியவஸாயத்தையும் பசுவிருத்தி விஷயத்தையும் கவனித்தன கால்நடை வியாதிகளைத்தடுப்பதற்கு முயர்ச்சிகளைச் செய்தன. வாராவதிகளை ரிபேர் செய்து சரியான ஸதிதியில் வைத்தன மேலும், பஞ்சாயத்துகள் தெருக்களில் விளக்குகளை ஏற்றிவைத்தன தெருக்களை பெருக்கி சுத்திபடுத்தி வைத்தன. நரகல்களையெடுத்து ஜலமலபாதையிடங்களை சுத்திப்படுத்தி வைத்தன. தங்களுடைய அதிகாரத்திற்குள்ளிருக்கிற சுகாதார சிப்பந்திகளைக்கொண்டு வாந்திபேதி வசூரி, முதலிய நோய்கள் பரவுதலைத் தடுத்தன. பள்ளிக்கூடங்களையும் பஞ்சாயத்து கோர்ட்டுகளையும் நன்றாய் நடத்தியன.

x x x

திருவாங்கூரில் தீப்பொட்டித் தொழிற்சாலைகளில் வீடுகளில் அலங்காரத்திற்காகத் தொங்கவிடப்படும் பாய்கள் செய்யபடுகின்றவாம். தீவத்திக்காக உபயோகப்படும் மெதுமரச்சிலாம்புகளிலிருந்து சன்னச்சிலாம்புகள் சிவப்பட்டு நூல்களோடு நெய்யப்படுகின்றனவாம். பாய்கள் நெய்யப்பட்ட பின்பு அவைகளில் சித்திரப்படங்கள் எழுதப்படுகின்றனவாம். இவைகள் ஜப்பானிலிருந்து வருகிற பாய்களைப் போலிருக்கின்றனவாம் இந்தத் தொழில் எல்லோராலும் அப்யஸிக்கப்படக்கூடும். இதற்கு வேண்டிய மரச்சிலாம்புகளை, வேண்டுவோர் தீப்பொட்டித் தொழில்ச் சாலைகளிடத்திலிருந்து தருவிக்கக்கூடும்.


**எங்கே ப்ளேகெங்கே, ப்ளேகில்லவேயில்லை.**

நாம் சொல்லும் பிரகாரம் ஹைமாதிபானகத்தை அநுதினமும் உபயோகப்படுத்தினால் ப்ளேக் ஜவரம், ப்ளேக் கட்டிகள் கூடகிட்ட நாடமாட்டாது.

குளிர்ஜ்வரம், முறைக்காச்சல் ஜன்னியோடு,

உண்டாகும் ஜ்வரம் முதலான எல்லாவித

ஜ்வரங்களுக்கு ராமபாணம்

**எங்கள் ப்ளேக் மருந்துகளுக்கு முக்கியபிரசித்தி**

இண்டியா, பர்மா, சிலோன், ஏடன் முதலிய இடங்களில்

30 வருஷமாய் அநேக ஆயிரம் பிரயாணிகள்

ப்ளேக்கிலிருந்து காப்பாற்றப்படுவதே.

**ப்ளேக் ஜ்வரத்திற்கும் ப்ளேக் கட்டிகளுக்கும்**

ஹைமாதிபானகமும் (ரிஜிஸ்டர்டு) அண்டு சததௌதக்ருதமும்

| | | |
|---|---|---|
| | பெரியசெட் | 1 க்கு 2—2—0 |
| ஷி | சிறியசெட் | 1—6—0 |

பாகிங் போஸ்டேஜி பிரத்தியேகம்.

கோருகிறவர்களுக்கு எங்கள் கேட்லாக்கு
இனமாக அனுப்பப்படும்.

**வைத்யரத்ன. பண்டித டி. கோபாலாசார்லு**
**அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட**

அயுர்வேத ஆசிரமம்
251, கோவிந்தப்ப நாயகன் வீதி, மதராஸ்

தந்திவிலாசம் டெலிபோன்

"பண்டிட்" நெ. 287, மதராஸ்

மதராஸ்.

ஏஜண்டுகள் தேவை

# இந்திய விவசாயம்.

— : (o) : —

199373

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிறைப்பள்ளி.

---


**டாக்டர் 'ஜீ' பீ. என்பவரின் சுகந்த மூக்குத்தூள்**

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன.

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் சண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத் தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும்காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.



REGISTERED
TRADE MARK

புட்டி ஒன்றுக்கு விலை அணா 4

**புலி மார்க்**

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

**குருபசவா அண்டு கம்பெனி, லிமிடெட்**

தபாற் பெட்டி நெ. 510 | பார்க் டவுன்,
விலாசம் "மெடிகேடெட்" | சென்னை

199373


# AMRUTANJAN

## MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS




SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

*and All Aches & Pains*

**Price 10 As a pot.**

*Amrutanjan Depot*

Bombay & Madras

## ஒரு ஏக்கர் கருணைக்கிழங்கு சாகுபடி செய்யவேண்டிய சிலவு ஆதார ஜாப்தா.

### சிலவு

| விபரம். | ரூ | அ | பை |
|---|---|---|---|
| உழவு 5-க்கு | 15 | 0 | 0 |
| குளத்து வண்டல் 50-வண்டிக்கு | 12 | 0 | 0 |
| தொழுஎரு 50-வண்டிக்கு | 40 | 0 | 0 |
| விதைக்கிழங்கு 25-மூட்டைக்கு மூட்டை ஒன்றுக்கு ரூ 3 8 0 ஆ | 87 | 0 | 0 |
| ஆட்டுக்கிடை | 7 | 0 | 0 |
| கிழங்குகள் விதைக்கும் கூலி | 12 | 0 | 0 |
| களையெடுத்தல் (15 பெண்பிள்ளைகள் 4 அணா ஆ 6-தடவை) | 22 | 8 | 0 |
| வாய்க்கால் செப்பனிட்டு சேத்தப்பட்டம் கட்டுவதற்கு 30 ஆட்கள் | 15 | 0 | 0 |
| கிழங்குவெட்டு சுத்தம் செய்தல் கூலி கிழங்குகளாகையால் விலை | 20 | 0 | 0 |
| தண்ணீர் பாய்ச்சல் | 60 | 0 | 0 |
| நிலவரி | 6 | 0 | 0 |
| முதலுக்கு வட்டி | 60 | 0 | 0 |
| சிலவு | 358 | 0 | 0 |

### வருமானம்.

| விபரம். | ரூ | அ | பை |
|---|---|---|---|
| ஏக்கர் 1-க்கு 180 மூட்டைக்கு மூட்டை ஒன்றுக்கு ரூ 3 8 0 ஆ | 630 | 0 | 0 |
| சிலவு ரூபாய் | 358 | 0 | 0 |
| சிலவு போக பாக்கி ரொக்க ஆதாயம் | 272 | 0 | 0 |

புதுக்கோட்டை விவசாய டிப்பார்ட்மெண்டு

(இந்திய விவஸாயம்)



## வர்த்தமானக் குறிப்பு

ராவ் பஹதூர் என். கோபாலசாமி ஐய்யங்கார் அவர்கள் அநந்தபூர் ஜில்லாவின் கலெக்டராக மாற்றப்பட்டார். அவர் வஹித்து வந்த பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரல் வேலைக்கு மிஸ்டர் டி. ஜி. ரதர்பர்டு அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் மிஸ்டர் டி. ஜி. ரதர்பர்டு அவர்கள் ஜனங்களிடத்தில் விசுவாசமுள்ளவர், தவிரவும் வெகுதிறமையுள்ள ஆபீஸர் ராவ்பஹதூர் கோபாலசாமி ஐய்யங்கார் அவர்களால் உண்டாக்கப்பட்டு வளர்த்துவரப்பட்டிருக்கிற பஞ்சாயத்துகள் இவருடைய மேல் பார்வையில் முன்னுக்கு வருமென்பதில் சந்தேகமில்லை

x x x

பிரிடிஷ் ராஜ்ய பாரெஸ்டு கன்பரன்ஸ் இவ்வருஷம் ஆஸ்டிரேலியாவில் பெர்த்திலும், காம்பெர்ராவிலும் நடைபெறுமாம். இது மூன்றாவது கன்பரன்ஸ். முதல் கன்பரன்சு இங்கிலாந்தில் 1920ல் நடைபெற்றது. இரண்டாவது கனடாவில் 1923ல் நடைபெற்றது இரண்டாவதில் இந்தியாவிலிருந்து பிரதிநிதி ஒருவர் அழைக்கப்பட்டார் மூன்றாவது கன்பரன்சுக்கு உலகத்தில் எல்லாதேசங்களிலிருந்துப் பிரதிநிதிகள் போவார்கள். அவரவர் அவரவர்களுடைய தேசத்துக்காட்டு விஷயங்களைப்பற்றி உபந்யாஸம் செய்வார்கள். சென்னையிலிருந் சீப்கன்சர்வேடராகிய மிஸ்டர் ஆர். டி. ரிச்சுமண்டு அவர்கள் கன்பரன்சுக்குப் பிரதிநிதியாகச் செல்லப்போகுறார்.

x x x

நிஜாம் ராஜ்யத்தில் வியவ்ஸாய முன்னேற்ற விஷயமாய் யோஜனைகளைச்சொல்லிச் சீர்முறைகளை ஏற்படுத்தவேண்ய நிமித்தம் பம்பாய் இராஜதானியின் வியவஸாய அத்யக்ஷராகவிருந்து இப்பொழுது வேலையிலிருந்து நீங்கியிருக்கிற டாக்டர் ஹரோல்டுமோன் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்படுகிறோம்.

x x x

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருப்பனந்தாள மடத்தின் தம்பிரான் அவர்கள் தமிழ், தெலுங்கு, இத்தியாதிபாஷைகளில் ஜனங்களுக்கு உபயோகமான விஷயங்களைப் பற்றி புஸ்தகங்களை எழுதிப்பிரசுரிப்பதற்காக சென்னை சர்வகலாசாலையின் அதிகாரிகளிடத்தில் 15000 ரூபாயைக்கொடுக்க உத்தேசித்திருக்கிறார். புஸ்தகங்கள் ஏழைகளுக்கு சுவல்ப விலைக்கு விற்கப்படுமாம்.

x x x

மைசூர் திவான் அவர்கள் சபையில் வரவு சிலவு திட்டத்தைப் பற்றிப் பேசும்பொழுது, ராஜ்யபாரத்தின் நோக்கமானது இனி ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நல்ல தண்ணீர் கிணறும், வற்றாத குளமும், போதனைசக்தியை வஹிக்கிற உபாத்தியாயரோடுகூடிய ஒரு பள்ளிக்கூடமும், சரியாய் நடக்கிற ஒரு கூட்டுறவுச்சங்கமும், மருந்துகள் நிறைந்த ஒரு வைத்தியசாலையும் ஏற்படுத்தலாகவிருக்கும் என்று மொழிந்ததைப்பற்றி நாம் நிரம்பவும் சந்தோஷப்படுகிறோம்.